செ.வெ.எண்:92 நாள்:17.02.2018

திருநெல்வேலி மாவட்டம் மானூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

----

திருநெல்வேலி மாவட்டம் மானூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுமான பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.02.2018) நடைபெற்றது. பூமி பூஜை நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் மானூரை தலைமையிடமாக கொண்டு மானூர் வட்டம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மானூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட ரூ.2 கோடியே 62 லட்சம் ஒதுக்கீடு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் மொத்தம் 12 ஆயிரத்து 701 சதுர அடி பரப்பளவில் அமையவுள்ளது. இக்கட்டிதத்தில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வந்து செல்ல வசதி செய்யப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிடமும் கட்டப்படவுள்ளது. இவ்வளாகத்தில் வட்டாட்சியர் குடியிருப்பு 956 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. சுமார் 87 செண்டு பரப்பளவில் இக்கட்டிடங்கள் கட்டப்படும். இக்கட்டுமான பணிகள் 11 மாத காலத்திற்குள் முடிக்கப்படும். பொதுமக்கள் வந்து செல்ல வசதியாக பிரதான சாலையின் அருகில், முக்கிய பகுதியில் இக் கட்டிடம் கட்டப்படுகிறது. என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி.விஜிலா சத்தியானந்த், திருமதி.வசந்தி முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி. பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், முக்கிய பிரமுகர்கள் திரு.சுதாபரமசிவம், திரு.பரணிசங்கரலிங்கம், திரு.கண்ணன் (எ) ராஜூ, திரு.பல்லிகோட்டை செல்லத்துரை, திரு. சுப்பையாபாண்டியன், திரு.மகபுப்ஜான், ஸ்ரீராம் கட்டுமான நிருவன உரிமையாளர் திரு.கிருஷ்ணகுமார், மனூர் வட்டாட்சியர் திருமதி.மேனகா, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திருமதி.செல்வி, உதவி பொறியாளர் திருமதி.சந்தான செல்வி மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி